DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No.862 -2024

Deposition of Witness for D.W. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | நேருஜி | **தாலுகா** | : | திம்மம் |
| **த.பெ.** | : | ரெங்கசாமி | **தொழில்** | : | |
| **ஊர்** | : | கிழவிகுளம் | **வயது** | 61 | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 11.03.2026.

புகார்தாரர் ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

எனக்கும் புகார்தாரருக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. பெரியகுளத்தை சேர்ந்த ராஜா என்ற போலீஸ்காரர் புகார்தாரரை என்னிடம் சென்னைக்கு 2016 ம் ஆண்டு அழைத்து வந்தார். புகார்தாரர் என்னிடம் அவருடைய தம்பி பி.இ. படித்துள்ளதாகவும் அவர் என் தம்பிக்கு மின்வாரியத்தில் உதவி பொறியாளர் பணி பெற்றுதர முடியுமா எனக் கேட்டார். ராஜா என்பவர் ஏற்கனவே ராஜாவின் மனைவி வேலைக்காக என் மூலமாக இன்னொருத்தரிடம் விண்ணப்பம் கொடுத்திருந்தார். புகார்தாரர் அதே போல் என்னிடம் கேட்டதால் நான் புகார்தாரரை அந்த பெண்மணியிடம் அறிமுகப்படுத்தி வைத்தேன். அந்த பெண்மணியின் பெயர் கௌரி நாகராஜ், அவர் விருதுநகர் மாவட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. கட்சியின் மகளிர் அணியின் செயலராக இருந்தார். அந்த பெண்மணி சிவகாசிக்கும் சாத்தூருக்கும் இடையே உள்ள சின்னகாமன்பட்டி ஊரைச் சேர்ந்தவர் ஆவார். புகார்தாரர் விண்ணப்பத்தை அந்த பெண்மணியிடம் கொடுத்தார்.

புகார்தாரர் அந்த பெண்மணியிடம் பணம் நேரடியாக கொடுத்தார். அந்த கௌரி நாகராஜ் 2017 ம் ஆண்டு ஒரு விபத்தில் இறந்துவிட்டார். நான் சதுரகிரிக்கு வந்ததில்லை. நான் புகார்தாரர் கடைக்கு சென்றது இல்லை. நான் புகார்தாரரிடம் கைமாற்றுக் கடன் ஏதும் வாங்கவில்லை. ராஜா என்பவர் புகார்தாரர் நெருக்கடியில் இருப்பதாகவும், காசோலை கொடுங்கள் அவர் கடன்காரரை சமாளித்துக் கொள்வார் எனத் தெரிவித்தார். நான் வெற்று காசோலையை ராஜா என்பவரிடம்தான் கொடுத்தேன். புகார்தாரரிடம் கொடுக்கவில்லை. எனக்கும்

புகார்தாரருக்கும் எந்த வரவு செலவும் நேரடியாக இல்லை. நான் வத்திராயிருப்புக்கும் சென்றது இல்லை. புகார்தாரர் என்மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எ.சா.ஆ.1 உறுதி மொழி பத்திரம் ராஜா என்பவர் புகார்தாரருக்கு எழுதிக் கொடுத்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை :**</u>

புகார்தாரர் தரப்பில் சாட்சியை விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/3/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.